

விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, கெடார் ஊராட்சியில் கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், க.மும்மூர்த்தி, ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ.ஜெயபால், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய குழு தலைவர்கள் என்.கலைச்செல்வி, சங்கீதாஅரசி, ஓம்சிவசக்திவேல், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஒன்றிய நிர்வாகிகள் பழனி, கருணாகரன், சிவக்குமார் , செல்வம், மதன், செல்வராஜ், புனிதா ஐயனார் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்ட ம் சின்னமனூர் மேற்கு ஒன்றிய புலிக்குத்தி பேருந்து நிலையம் அருகில் 100 நாள் வேலை உறுதிதிட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.4034 கோடி நிதியை தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சின்னமனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன் தலைமையில் நடைபெற்றது .ஒன்றிய அவைத் தலைவர் செல்வம், ஒன்றிய துணை செயலாளர் ராமேஸ்வரி, பன்னீர்செல்வம், குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜன், சுருளி, மாவட்ட மீனவர்அணி துணை அமைப்பாளர் மகேந்திரன். மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சிங்கராசு, கிளை கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன். ஆனந்தன், புதுக்கோட்டை முத்து விஜயன், பெருமாள், போது மணி, பழனிச்சாமி, கிருஷ்ணமூர்த்தி,பழனி ராஜ் காந்தி, மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட மருத்துவர் அணி சார்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆலோசனையின்படி ஆதரவற்ற ஏழைகள் காப்பகத்தில் மருத்துவ அணி மாவட்ட தலைவர் அண்ணாதுரை தலைமையில், அணியின் அமைப்பாளர் டாக்டர் வெங்கடேஷ் சுப்பையா துணைச் செயலாளர்கள், துணை தலைவர்கள் செல்ல மணி, சுகுமாரன், விஜயசேகர பாண்டியன், தனபாலன், வாசு, சந்திர பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் அறுசுவை உணவு மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது. உடன் மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், பகுதி செயலாளர் புண்ணியமூர்த்தி, மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி, கழக நிர்வாகிகள் மாதவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மருத்துவர்கள் பங்கேற்றனர்.



இராமநாதபுரம் மாவட்டம்,முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் , சாம்ப குளத்தில் 100 நாள் வேலை உறுதி திட்ட நிதி தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோரியைவழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. மாவட்ட செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில், முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பூபதி மணி, தலைமையில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணைத்த லைவர் சத்தியேந்திரன், முதுகுளத்தூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ரஞ்சித் மணிகண்டன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் முருகன் உட்பட 300–க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் கழக அனைத்து அமைப்பின் நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

குருவிக்குளம் கிழக்கு ஒன்றியத்தில் ஈ.இராஜா எம்.எல்.ஏ. முன்னிலை – கே. குணசேகரன் தலைமை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் துரைமுருகன் – எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரை!

தென்காசி.ஏப்.3-

தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்த நாள் விழா,நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா,கழக அரசின் சாதனை விளக்கம் ஆகிய முப்பெரும் விழா 05. 04.2025 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இளைய ரசனேந்தல் கலைஞர் திடலில் நடைபெறுகிறது.இந்நிகழ்வில் கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக தலைவர் பிறந்தநாள் விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கழக அரசின் சாதனை விளக்கம் ஆகிய முப்பெரும் விழா குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் வருகிற 05 .04.2025 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இளைய ரசனேந்தல் கலைஞர் திடலில் ஒன்றிய செயலாளர் கே.குணசேகரன் தலைமயில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ முன்னிலையில்டை பெறுகிறது.

மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேல், சீனிவாசன்,பரமகுரு, தீர்மான குழு உறுப்பினர் சரவணன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, வாசுதேவநல்லூர் தொகுதி பார்வையாளர் தனுஷ் எம் குமார், சங்கரன்கோவில் தொகுதி பார்வையாளர் ராமஜெயம், மாவட்ட பொருளாளர் இல.சரவணன், துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை,புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி பாண்டியன், தேவதாஸ், சாகுல் ஹமீது, பராசக்தி, மகேஸ்வரி, பா.மாரிசாமி, பி.மாரிசாமி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.





தேனி வடக்கு மாவட்ட ம் போடி கிழக்கு ஒன்றிய உப்பார் பட்டி பேருந்து நிலையம் அருகில் 100 நாள் வேலை உறுதிதிட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.4034 கோடி நிதியை தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் போடி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் அய்யப்பன் தலைமையில் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் சங்கர் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முத்தனேந்தலில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து ஒன்றிய செயலாளர் துரை. ராஜாமணி தலைமையில் மானாமதுரை நகர் மன்ற தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன் கென்னடி, நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் கு.ராசாங்கம், ஏஆர்.ஜெயமூர்த்தி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சண்முகநாதன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அ.முத்துச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மதுரை மாநகரத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, ஏப்.3-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு-:



மதுரை மாநகரில் நடைபெறஉள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) அகில இந்திய மாநாட்டுக்கு வருகை தரும் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (03.04.2025- வியாழக் கிழமை) மாலை 04.00 மணி அளவில் அரசு சுற்றுலா மாளிகை (சர்கிட் ஹவுஸ்) முதல் தமுக்கம் மைதானம் வரை கரகாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், மேளதாளம் முழங்க கழக தொண்டர்கள் வெற்றி முழக்கத்தோடு மாபெரும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்க பட உள்ளதால்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் ரூ. 4034 கோடி நிதி ஒதுக்கீடு செய்யாத ஒன்றிய அரசைக் கண்டித்து சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முப்பையூரில் ஒன்றிய செயலாளர் நாகனிரவி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தேவகோட்டை தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன் மற்றும் தி.மு.க. பொறியாளர் அணி மாநில செயலாளர் எஸ்.கே.பி. கருணா ஆகியோர் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி, நகர, ஒன்றிய மற்றும் பேரூர் தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் பொறியாளர் அணி மாநில துணை செயலாளர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. நேர்காணலில் பங்கேற்ற அனைவரிடமும் அவர்களது கட்சிப் பின்னணி, கல்வித் தகுதி உள்ளிட்ட தகவல்கள் கேட்டு பதிவேற்றம் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஆபிரகாம், மாரிராஜ், ஜாபர், ரஞ்சித், புதூர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ், அமைப்பாளர் ரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.